9 - STD **அரையாண்டுத் தேர்வு - 2022**

நேரம்: 2.30 மணி

# தமிழ்

மதிப்பெண்கள்: 100

பகுதி - I

I. அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

ஆ) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக 15 x 1 = 15

1. ஐம்பெருங்குழு என்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்.
   அ) திசைச்சொற்கள் ஆ) வட சொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
2. விடை வரிசையைத் தேர்க.
   அ) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்
   ஆ) இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி
   1) நேவிக், சித்தாரா 2) நேவிக், வானூர்தி 3) வானூர்தி, சித்தாரா 4) சித்தாரா, நேவிக்
3. பொருத்தமான விடையைத் தேர்க.
   அ) சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்
   ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
   இ) சீவக சிந்தாமணி - 3. அற இலக்கியம்
   ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்
   1) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 2) அ-2, ஆ-3, இ-1, ஈ-4
   3) அ-3, ஆ-1, இ-4, ஈ-2 4) அ-4, ஆ-1, இ-2, ஈ-3
4. இந்திய தேசிய இராணுவம் ____________ இன் தலைமையில் __________ உருவாக்கினார்.
   அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர்
   ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
   இ) மோகன்சிங், ஜப்பானியர்
   ஈ) மோகன்சிங், இந்தியர்
5. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?
   அ) சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
   ஆ) இந்திய நூலகவியலன் தந்தையென அறியப்படுபவர் யார்?
   இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை.
   ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.
6. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்.
   அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
   இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி
7. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசமரம் இ) வளம் ஈ) பெரிய
8. திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ______.
   அ) விளங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
   இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்
9. நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடுகின்ற நாடுகள் முறையே
   அ) பாண்டியநாடு, சேரநாடு ஆ) சோழநாடு, சேரநாடு
   இ) சேரநாடு, சோழநாடு ஈ) சோழநாடு, பாண்டியநாடு



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

10. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசிய திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரக திறனாய்வுத் தேர்வு
இ) தேசிய திறனாய்வு கல்வி உதவித்தொகைத் தேர்வு
ஈ) மூன்றும் சரி

11. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" - என்று பாடியவர்.
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) கண்ணதாசன் ஈ) கம்பன்

பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு ( 12, 13, 14, 15) விடை தருக.

இன்னொரு மலர்க்கை யாலும்
இயற்றுக! கல்வி இல்லா
மின்னாளை வாழ்வில் என்றும்
மின்னாள் என்றே உரைப்பேன்!

12. மேலுள்ள பாடலடிகள் இடம்பெற்ற நூல் எது?
அ) மணிமேகலை ஆ) பெரியபுராணம் இ) குடும்பவிளக்கு ஈ) சிறுபஞ்சமூலம்

13. "மலர்க்கை" - இலக்கணக் குறிப்பு தருக.
அ) உருவகம் ஆ) உவமைத் தொகை இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

14. இதில் அமைந்த எதுகைச் சொல்லை எடுத்து எழுதுக.
அ) இன்னொரு, மின்னாள் ஆ) இயற்று, மின்னாள்
இ) இயற்று, கல்வி ஈ) மின்னாள், வாழ்வில்

15. சொல்லிற்கான பொருளை தேர்க: 'மின்னாள்'
அ) மின்னலைப் போன்றவள் ஆ) ஒளியைப் போன்றவள்
இ) ஒளிரமாட்டாள் ஈ) ஒலியைப் போன்றவள்

## பகுதி - II

**I. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **4 x 2 = 8**
(21 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிரதிவ்யப்பிரபந்தம்
ஆ) புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

17. "மதுரைகாஞ்சி" - பெயர்க்காரணத்தை குறிப்பிடுக.

18. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

19. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

20. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

21. "சுழன்றும்ஏர்ப்" ........ எனத் தொடங்கும் திருக்குறள் எழுதுக.

**II. எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி.** **5 x 2 = 10**

22. பிழைநீக்கி எழுதுக.
அ) பவளவிழிதான் பரிசு உரியவள் ஆ) குழிலியும் பாடத் தெரியும்.

23. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) நேற்று தென்றல் காற்று அடித்தது ஆ) கொடியிலுள்ள மலரை எடுத்து வா

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக : பூக்கும்

25. கலைச்சொற்களைத் எழுதுக. அ) Treasury ஆ) Classical Literature
ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக : (கால், எழுதி)
எனக்கு _____ பங்கு பிரித்துக் கொடுக்கவா ! கீழே ஈரம் : பார்த்து உன் _____ ஐ வை.

26. பிழை நீக்கி எழுதுக.
அ) சூறாவளியின் போது மேல்மாடியல் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

27. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றுக.

அ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராக்கு)

28. தொடர் தரும் பொருளைக் கூறு

அ) பொய்ச்சொல், பொய்சொல்

## பகுதி - III

2 x 3 = 6

**I. எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.**

29. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைகோளின் பங்கு யாது?

30. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

இந்திய தேசிய இராணுவம் ஜப்பானிய இராணுவத்தோடு சேர்ந்து ஆங்கிலேயரோடு போரிடப் பர்மா வழியாக இந்தியா வரத்திட்டமிட்டது. தமிழ் மக்கள் துணையுடன் போராடிய நேதாஜியைக் கண்டு ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் பொறாமை கொண்டார். 'மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என்று சர்ச்சில் கூறினார். அதற்கு நேதாஜி இந்தத் தமிழினம்தான் ஆங்கிலேயர்களை அழிக்கும் என்று பதில் கூறினார்.

கேள்விகள்:

அ) இந்திய தேசிய இராணுவம் எதனோடு சேர்ந்து இந்தியா வரத்திட்டமிட்டது?

ஆ) ஆங்கிலேயர்களை அழிப்பது யார் என்று நேதாஜி பதில் கூறினார்?

இ) தமிழர்களின் இரத்தம் எங்குள்ளது என்று சர்ச்சில் கூறினார்?

2 x 3 = 6

**II. எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.**

**(34வது வினாவிற்கு கட்டாயமாக பதில் தருக)**

32. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

33. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) அள்ளல் பழனத்து ...... எனத் தொடங்கும் முத்தொள்ளாயிரம் பாடலை எழுது.

(அல்லது)

ஆ) கல்லிடைப் பிறந்த ....... எனத் தொடங்கும் இராவணகாவியம் பாடலை எழுது

2 x 3 = 6

**III. எவையேனும் 2 வினாக்களுக்கு சுருக்கமான மட்டும் விடையளி.**

35. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. கைபிடி, கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும், அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

37. பண்பாகுபெயர், தொழிலாகுபெயர் - விளக்குக?

## பகுதி - IV

5 x 5 = 25

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

38. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக. (அல்லது)

நயம் பாராட்டுக :

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்!
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். - கவிமணி

39. "எனது பயணம்" என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

(அல்லது)

உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சல் அனுப்புமாறு செய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

40. காட்சியைக் கண்டு கவிதை எழுதுக.



41. மொழிபெயர்க்க.

**Conversation between two friends meeting by chance at a Mall.**

Aruna : Hi Vanmathi! It's great to see you after a long time

Vanmathi : It's great seeing you. How long has it been? It must be more than 6 months. I am doing good. How about you?

Aruna : Fine, I have come with my Parents. They are inside the grocery shop, what about you?

Vanmathi : I came with my father. He has gone to buy Tickets for a 3D Movie

**மாற்றுத்திறனாளிகளுக்கான மாற்று வினா : வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்கு:**

1. இப்போது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம்.
2. பாமர மக்கள் பாராளும் காலம்.
3. அடவியல் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருந்து குரு பாடங்களை சொல்லித் தரும் காலம்.
4. ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம்.
5. நமது முன்சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன.

42. மின்சார சேமிப்பு பற்றிய விழிப்புணர்வு முழக்கத்தொடர் ஐந்தினை எழுதுக.

## பகுதி - V

I. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 x 8 = 24**

43. நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

(அல்லது)

இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.

44. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

(அல்லது)

பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

45. சாலைப்பாதுகாப்பு குறித்து கட்டுரை எழுதுக.

(அல்லது)

நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com